[2006 ஆகஸ்ட் 24

## 4. தகவல் கோரல்

### சென்னை விமான நிலைய விரிவாக்கத் திட்டத்தை மக்கள் பாதிக்கப்படாதவண்ணம் மேற்கொள்ளுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... *(குறுக்கீடுகள்)*

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**திரு. வி.பி. கலைராஜன்:** Speaker Sir...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் பிறகு அறையில் வந்து பாருங்கள்.*

*முற்பகல் 10–40*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு பிரச்சினை குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சென்னை விமான நிலையத்தை சர்வதேசத் தரத்திற்கு இணையாக விரிவாக்கம் செய்வதற்கான முயற்சி, மத்திய அரசின் சார்பிலே மேற்கொள்ளப்படுகிறது. அதை நாம் அனைவருமே வரவேற்கிறோம். ஆனால், அதேநேரத்தில் அந்தச் சென்னை விமான நிலையம் விரிவாக்கத்திற்காகத் தேர்வு செய்யப்படுகிற இடங்கள் என்பது, சென்ற ஆட்சிக் காலத்திலே தேர்வு செய்யப்பட்ட இடம் ஒன்றாக இருக்கிறது. அதே ஆட்சிக் காலத்திலேயே, திரும்பவும் அதை மாற்றி வேறு இடத்தைத் தேர்வு செய்வதற்குரிய முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பாக, பொழிச்சலூர் ஊராட்சிப் பகுதியில் தேர்வு செய்யப்பட்டிருக்கிற அந்தப் பகுதி என்பது, மிகப் பெரிய அளவிலே பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. பொழிச்சலூர், அனகாபுத்தூர், கவுல் பஜார், பம்மல் போன்ற இந்தக் கிராமங்களை, இந்தப் பகுதிகளை உள்ளடக்கிய பகுதிகளில், கிட்டத்தட்ட கூரை வீடுகளும், ஓட்டு வீடுகளும், மாடி வீடுகளுமாக 4,629 வீடுகள்

2006 ஆகஸ்ட் 24] [திரு. வை. சிவபுண்ணியம்]

இருக்கின்றன; அங்கே 23 கோயில்கள் இருக்கின்றன; மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் 9 இருக்கின்றன; ரேஷன் கடை 1 இருக்கிறது; பள்ளிக்கூடங்கள் 14 இருக்கின்றன; அரசுக் கட்டடங்கள் 8 இருக்கின்றன; சர்ச் 2 இருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட பொதுவாக இருக்கக்கூடிய கட்டடங்கள், அங்கே ஏராளமாக இருப்பதுடன், கிட்டத்தட்ட 25 ஆயிரம் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்ற பகுதி அது. அதிலே இந்த விமான நிலையம் விரிவாக்கம் செய்யப்படுமானால், சாதாரண ஏழையெளிய மக்களும் பொதுமக்களும், மிகப் பெரிய இன்னல்களுக்கும், கஷ்டத்திற்கும் ஆளாகக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, அதற்கு அருகிலே இருக்கக்கூடிய நிலப் பகுதியைத் தேர்வு செய்வதற்கான முயற்சியை எடுக்கலாம். அதைப்பற்றி மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்துவதற்கு நமமுடைய மாநில அரசு, நிலம் எடுத்துக் கொடுப்பதற்கான முயற்சியை எடுக்கிறபொழுது, அதைப்பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்படி, இந்தப் பகுதிகளிலே தேர்வு செய்வதிலே பிரச்சினைகள் இருக்கும்; மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்று கருதினால், வேறு மாற்று இடத்தைக்கூட தேர்வு செய்யலாம். சென்னை நகரமும் மற்ற பகுதிகளும் வேகமாக வளர்ந்து வருகின்றபொழுது, அதற்கு அருகிலேயிருக்கக்கூடிய அம்பத்தூர் பகுதியிலோ, ஆவடி பகுதியிலோ, புதியதாக அந்த விமான நிலையத்தைக் கட்டுவதற்கான முயற்சி எடுக்கப்படுமானால், அதற்குத் தேவையான சாலை வசதிகள், எல்லா வசதிகளும் செய்து கொடுப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதைப்பற்றிச் சிந்தித்து, அந்த வளர்ச்சியைச் செய்வதற்குரிய முயற்சியைப்பற்றி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு, இந்த மக்களுக்குரிய பாதிப்பைத் தடுத்து நிறுத்துவதற்கும், அந்த விமான நிலைய விரிவாக்கத்திற்குரிய முயற்சியை, மக்களைப் பாதிக்காதவண்ணம் செய்வதற்குரிய முயற்சியாக மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள், 'கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை' என்று ஒரு கருத்தை இங்கே

வெளியிட்டிருக்கின்றார். அது எப்படி முடியும் என்பதைப் பரிசீலித்து, மத்திய அரசின் விமானப் போக்குவரத்துத் துறையோடு கலந்து ஆலோசித்து, ஏற்றது செய்வதற்கு அரசு தன்னாலான முயற்சிகளில் எல்லாம் ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பொதுவாக, ஏழையெளிய மக்கள், பாமர மக்கள் பாதிக்கப்படுகின்ற எந்தக் காரியத்திலும் இந்த அரசு ஈடுபடாது; அனுமதிக்காது. ( மேசையைத் தட்டும் ஒலி )

**திரு. தி. வேல்முருகன்:** தலைவர் அவர்களே..

**திரு. வி.பி. கலைராஜன்:** தலைவர் அவர்களே, ஒரு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். (குறுக்கீடுகள்) 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் வேலை.. (குறுக்கீடுகள்) என்ன Mr. வேல்முருகன்? Do not disturb, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No, No. (குறுக்கீடுகள்) முதலில் பேசாமல் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அடுத்த business-க்கு வந்தாகிவிட்டது. உட்காருங்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.